செ.வெ.எண்183/2009(செமதொஅ) நாள் : 26.06.2009.

**அகில உலக போதை மருந்து அருந்துதல் குறித்த விழிப்புணர்வுப் பேரணியை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தோஷ் கே.மிஸ்ரா இ.ஆ.ப. அவர்கள் கொடியசைத்து துவக்கி வைத்தார்.**

ஆண்டுதோறும் ஜுன் 26ம் நாள் போதை மருந்து அருந்துதல் மற்றும் கள்ளத்தனமாக கடத்துதல் நடவடிக்கைக்கு எதிரான நாள் நாடு முழுவதும் கடைபிடிக்கப்பட்டு வருகிறது. இந்த ஆண்டு (2009) ஜுன் 26ம் நாள் அகில உலக போதை மருந்து அருந்துதல் மற்றும் கள்ளத்தனமாக கடத்துதல் நடவடிக்கைக்கு எதிரான நாளாக கடைபிடிக்கும் வகையில் கொண்டாடப்பட வேண்டும் என அரசு கேட்டுக் கொண்டுள்ளது. அதனையொட்டி காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள மக்களிடையே ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் மாவட்ட நிர்வாகமும், போதைப்பொருள் நுண்ணறிவுப் பிரிவும் இணைந்து காஞ்சிபுரம் பேருந்து நிலையம் அருகே பள்ளி மாணவ-மாணவிகளின் மூலம் பேரணி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்த பேரணியில் டாக்டர் பி.எஸ்.எஸ். சீனிவாச நகராட்சி மேல்நிலைப் பள்ளி, எஸ்.எஸ்.கே.வி. பெண்கள் மேல்நிலைப் பள்ளி, அந்திரசன் மேல்நிலைப் பள்ளி, பச்சையப்பன் மேல்நிலைப் பள்ளி, ஏ.கே.டி. நகராட்சி உயர்நிலைப்பள்ளி, டி.எஸ்.எம். நகராட்சி மேல்நிலைப்பள்ளி, தா.மு.சுப்பராய முதலியார் உயர்நிலைப் பள்ளி, பெரிய காஞ்சிபுரம் பெண்கள் மேல்நிலைப்பள்ளி, சின்ன காஞ்சிபுரம் பெண்கள் மேல்நிலைப்பள்ளி, மரியா ஆக்ஸிலியம் ஆகிய பள்ளிகளைச் சேர்ந்த மாணவ-மாணவர்கள் கலந்து கொண்டார்கள்.

இந்த விழிப்புணர்வு பேரணியை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தோஷ் கே.மிஸ்ரா இ.ஆ.ப அவர்கள் கொடியசைத்து துவக்கி வைத்தார். இந்த பேரணி பேருந்து நிலையத்தில் இருந்து புறப்பட்டு, காமராஜர் சாலை, மூங்கில் மண்டபம், வள்ளல் பச்சையப்பன் தெரு, மேட்டுத்தெரு, கருக்கினில் அமர்ந்தவள் கோயில் தெரு, காவலான் கேட் வழியாக மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக வளாகத்தை வந்தடைந்தது. பேரணியில் மாணவ-மாணவிகள் “போதைக்கு அடிமை ஆகாதே, பூ உடம்பை அழிக்காதே, போதை பழக்கத்தை ஒழிப்போம்; பூ உலகில் வாழ்ந்து காட்டுவோம் போன்ற 11 வாசகங்கள் அடங்கிய அட்டைகளை கையில் ஏந்தி கோஷமிட்டு சென்றனர்.

இந்த நிகழ்ச்சியில் உதவி ஆணையர் (கலால்) திரு.கே.முருகையா, மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர் திரு.வெ.ரமணா, கோட்ட கலால் அலுவலர் திரு.பி.இளங்கோவன், மாவட்ட கல்வி அலுவலர் திரு.ரெ.சுப்பிரமணியன், கல்வி ஆய்வாளர் திரு.சுந்தரவதனம், போதை பொருள் நுண்ணறிவுப்பிரிவு தலைமைக் காவலர் திரு.து.கலைச்செல்வன், காவலர்கள் திரு.மகாலிங்கம், திரு.கிருஷ்ணன், உடற்பயிற்சி ஆசிரியர்கள் மற்றும் அரசுத்துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

செய்தி வெளியிடுபவர்,
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்
காஞ்சிபுரம்.